ॐ

मुञ्जादिषीकामिव दृश्यवर्गात्
प्रत्यञ्चमात्मानमसङ्गमक्रियम्।
विविच्य तत्र प्रविलाप्य सर्वं
तदात्मना तिष्ठति यः स मुक्तः।।

முஞ்ஜாதிஷீகாமிவ த்ருச்யவர்காத் ।
ப்ரத்யஞ்சமாத்மானமஸங்கமக்ரியம்
விவிச்ய தத்ர ப்ரவிலாப்ய ஸர்வம்
ததாத்மனா திஷ்டதி ய: ஸ முக்த: ॥

விவேகசூடாமணி - 155

முஞ்ஜம் என்கின்ற புல்லிலிருந்து அதில் உள்ள தண்டை உருவி எடுப்பது போல அஸங்கமான, செயலற்ற, உள்ளே இருக்கும் ஆத்மாவை அறியப்படும் கூட்டங்களிலிருந்து தனியாகப் பிரித்து; அந்த ஆத்ம ஸ்வரூபமாகவே யார் நிலைத்துள்ளானோ அவன் முக்தனாகிறான்.